பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 04 2024 **THURSDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. பிரச்சாரத்தின்போது தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அரசியல் கட்சிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

2. மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

3. பணவீக்கத்தை கட்டுப்படுத்த பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

4. தாலுக்கா மற்றும் பஞ்சாயத்து அளவிலும் வானிலை முன்னறிவிப்புகள் வழங்கப்பட உள்ளதாக புவி அறிவியல் துறை செயலர் திரு ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

----- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<<>>>>>

தேர்தல் பிரச்சாரத்தின்போது அரசியல் கட்சிகளின் நட்சத்திர பேச்சாளர்கள் நடத்தை நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

பிரச்சாரக்கூட்டங்களில் பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சியின் நட்சத்திர பேச்சாளர்கள் தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாக கூறி, பெறப்பட்ட புகார் தொடர்பாக வரும் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று அவ்விரு கட்சிகளுக்கும் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் **Banswara**-வில் பிஜேபி மூத்த தலைவர் தேர்தல் பிரச்சாசரத்தின்போது தெரிவித்த கருத்துக்களுக்கும், கேரள மாநிலம் கோட்டயத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் தெரிவித்த கருத்துகளுக்கும் எதிராக பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் இந்த நோட்டீஸை அனுப்பியுள்ளது.

<<<<<<<>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த பத்தாண்டுகளில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று தெலங்கானாவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

முந்தைய காங்கிரஸ் அரசு பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 400-க்கும் கூடுதலான தொகுதிகளில் வெற்றிபெறும் என்று திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

பணவீக்கத்தை கட்டுப்படுத்த பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் மத்திய அரசு தவறிவிட்டதாக தெரிவித்தார்.

பிஜேபி தலைமையிலான அரசு மேற்கொண்ட தவறான கொள்கைகள் காணரமாக, பொருளாதார சமத்துவமின்மை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பெற்றால் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்று திரு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

<<<<<<<>>>>>

தாலுக்கா மற்றும் பஞ்சாயத்து அளவிலும், வானிலை தொடர்பான முன்னறிவிப்புகளை வானிலை ஆய்வு மையம் வழங்கவுள்ளதாக புவி அறிவியல் துறை செயலர் டாக்டர் ரவிச்சந்திரன் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற வானிலை ஆய்வு மையத்தின் 150-வது ஆண்டு தின விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன், கோடை வெயிலின் தாக்கம் குறித்து வானிலை ஆய்வு மையம் தொடர்ந்து கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

சென்னை வானிலை ஆய்வு மையத்தை பொறுத்தவரை இது 80-ஆவது ஆண்டு தினமாகும் என்றும் திரு பாலச்சந்திரன் கூறினார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு வெயிலின் தாக்கம் இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<<>>>>>

கோடை வெயில் அதிகரித்துவரும் சூழலில் **Heat Stroke** ஏற்படாமல் தடுப்பதற்கு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் டீன் டாக்டர் தேரணி ராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<<>>>>>

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் மேற்கொள்ளப்பட்டு வந்த பராமரிப்புப்பணிகள் முடிவடைந்துள்ளன.

இதன் காரணமாக சுற்றுலாப்பயணிகள் அந்த அருவியில் குளிப்பதற்கு நாளை முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டத்தில் குடிநீர் விநியோகம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி சாந்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

\------------------

விழுப்புரம் மாவட்டத்தில் தனியார் பள்ளி வாகனங்கள் பாதுகாப்பு நெறிமுறைகளை முழுமையாக கடைபிடிக்காவிட்டால் அவற்றுக்கான உரிமம் ரத்து செய்யப்படும் என்று ஆட்சியர் திரு பழனி எச்சரித்துள்ளார்.

\-------------

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே கிராம ஊராட்சி செயலர் இல்லத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

\--------------------

திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர்கோவில் சித்திரை தேர் திருவிழா அடுத்த மாதம் 6-ஆம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு அன்றைய தினம் திருச்சி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படுவதாக ஆட்சியர் திரு பிரதீப் குமார் கூறியுள்ளார்.

\-----------------

தஞ்சாவூர் மாவட்டம் சுவாமிமலை முருகன் கோவிலில் சித்திரை திருவிழா தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் குண்டு எறிதல் பிரிவில் இந்தியாவின் **Anurag Singh Kaler** தங்கப்பதக்கத்தையும், சித்தார்த் சௌத்ரி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் வட்டு எறிதல் பிரிவில் **Amanat Kamboj** வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் 10 ஆயிரம் மீட்டர் நடைப்போட்டியில் ஆர்த்தி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

---------

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Mona Agarwal** தங்கப்பதக்கம் வென்றார்.

தென்கொரியாவின் **Changwon** -ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

உலக கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Jyothi Surekha Vennam** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 143-142 என்ற புள்ளி கணக்கில், இந்தியாவின் **Avneet Kaur** —ஐ வென்றார்.

**<<<<<<<END>>>>>**